# இஸ்ரேல்-ஹமாஸ் மோதல்

# தொடர்பான ஆலோசனை

**மத்திய கிழக்கில் நடந்து வரும் மோதல்கள் பல அப்பாவி மக்களின் உயிர்களைக் கொன்றுள்ளதுடன், உலகளவில் உணர்வுப்பூர்வத் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. நாம் அமைதியாகவும், சிங்கப்பூரின் இன மற்றும் மத நல்லிணக்கத்தையும், அமைதியையும் வெளிப்புற நிகழ்வுகள் பாதிக்க அனுமதிக்காமலும் இருப்பது முக்கியம்.**

> நாம் (சிங்கப்பூர்) நமது நிலைப்பாட்டில் தெளிவாக இருக்க வேண்டியுள்ளது – பயங்கரவாத மற்றும் விரும்பத்தகாத வன்முறைச் செயல்கள் அனைத்தையும் நாம் கண்டிக்கிறோம். .... தீவிரவாதத்தையும் வன்முறையையும் ஊக்குவிக்கின்ற அல்லது ஆதரிக்கின்ற எவருக்கும் எதிராக நாம் செயல்படுகிறோம்.
>
> திரு கே சண்முகம்
> உள்துறை அமைச்சர்
> 12 அக்டோபர் 2023

சிங்கப்பூரில் உள்ள வெளிநாட்டுப் பணியாளர்கள் பின்வருபவைத் தொடர்பாக அறிவுறுத்தப்படுகிறார்கள்:

- **தீவிரவாதம், வன்முறை மற்றும் பயங்கரவாதத்தின் எந்த வடிவத்தையும் சிங்கப்பூர் சற்றும் பொறுத்துக்கொள்வதில்லை.** இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் எவரும் சிங்கப்பூர் சட்டத்தின்கீழ் கடுமையாகக் கையாளப்படுவார்கள்.
- **வெளிநாட்டு அரசியலை சிங்கப்பூரில் ஆதரிக்கவோ கொண்டு வரவோ வேண்டாம்.** பதாகைகள், கொடிகள், சுவரொட்டிகள் போன்றவற்றை பொதுவில் காட்சிப்படுத்துவதும் இதில் அடங்கும்.
- **வெவ்வேறு இனத்தினருக்கு அல்லது மதத்தினருக்கு இடையே வன்முறையை அல்லது வெறுப்பை விளைவிக்கும் வகையில் உணர்ச்சிகளைத் தூண்டும் எந்தத் தகவலையும் நேரில் அல்லது ஆன்லைனில் எழுதவோ, இடுகையிடவோ, பகிரவோ வேண்டாம்.** அவ்வாறு செய்வது சிங்கப்பூர் சட்டப்படி குற்றம் மட்டுமல்லாது, தண்டனைக்கும் உரியதாகும். குற்றவாளிகள் சிங்கப்பூரில் வேலை செய்யத் தடை விதிக்கப்படலாம்.
- **மற்றவர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் இஸ்ரேல்-ஹமாஸ் மோதல் தொடர்பாகச் சரிபார்க்கப்படாத தகவல்களை யூகிக்கவோ, பரப்பவோ வேண்டாம்.**
- **மோதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ நீங்கள் நன்கொடை வழங்க விரும்பினால், சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கம் அல்லது ரஹ்மதன் லில் ஆலமின் (ப்ளெஸிங் டு ஆல்) அறக்கட்டளைப் போன்ற அதிகாரப்பூர்வ வழிகள் மூலமாக அதைச் செய்யுங்கள்.** இது, நன்கொடைகள் உண்மையான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்காகும்.
- **பயங்கரவாத (நிதி வழங்குதலை ஒடுக்குதல்) சட்டத்தின்கீழ் குற்றமாகும் என்பதால், எந்த பயங்கரவாதக் குழுவிற்கும் பணம் அனுப்பவோ, ஆதரவளிக்கவோ கூடாது.** குற்றம் நிரூபிக்கப்பட்டால், உங்களுக்குச் சிறை தண்டனை மற்றும்/அல்லது அபராதம் விதிக்கப்படலாம்.
- **விழிப்புடன் இருங்கள், சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகள் குறித்து அல்லது தீவிரவாதப் பரப்பலின் அறிகுறிகளைக் காட்டக்கூடிய நபர்கள் குறித்து உடனடியாக காவல்துறைக்கு** 1800-255-0000 **என்ற எண்ணில் அல்லது உள்நாட்டுப் பாதுகாப்புத் துறைக்கு** 1800-2626-473 **என்ற எண்ணில் புகாரளிக்கவும்.**

இந்தச் செய்தியை உங்களுக்கு வழங்குபவர்

MINISTRY OF HOME AFFAIRS · INTERNAL SECURITY DEPARTMENT · MINISTRY OF MANPOWER

ஆதரவளிப்பவர்

SGSECURE — STAY ALERT. STAY UNITED. STAY STRONG.